"ஓம் நமச்சிவாய!"

ஆகஸ்ட் 19, 2020 **அன்று 90ஆம்** பிராயம் எட்டும் **"கலை பேரரசி" ஸ்ரீமதி ராஜி நாராயணன்** அவர்கள் திருவடித்தாமரைகளில், ஸ்ரீமதி சாவித்திரி ராமமூர்த்தி குடும்பத்தினர் சார்பில், சிரம் தாழ்த்தி கரம் குவித்து பணிவான வணக்கங்களைத் தெரித்து அன்புடன் சமர்ப்பிக்கும் **"வாழ்த்து மடல்"**.

○○○○○

**அ**ன்பே உருவாம் ராஜி அத்தையை,

அன்றும், இன்றும், என்றும் மறவேனே!

**ஆ**ற்றின் அலையாய், அதிரும் ஒலியாய்,

காற்றின் தென்றலாய் நினைவெழுகின்றதே!

**இ**சைப்பேருரையில் நிலைத்து முன்னேற,

இசையும் நடனமும் பயிற்றுவித்தீரே!

**ஈ**சன் புகழைப் பாடும் திறத்தை,

பாசம் பொங்க கண்டு களித்தீரே!

**உ**யிரின் மேலாம் அருமை **ஷியா**முடன்,

**ஊ**ரைக் கடந்தே மும்பை சென்றீரே!

**எ**ன்றும் அயரா உழைப்பால் உயர்ந்தே,

**ஏ**ற்றம் தரும் புகழ் ஆற்றல் பெற்றீரே!

**ஐ**யம் இன்றி தடைகளைக் கடந்தே,

**"நிருத்திய கீதாஞ்சலி"** நிலைத்திட செய்தீரே!

**ஒ**ப்புயர்வில்லா உயர்நிலை அடைந்தே,

**ஓ**ங்கு நல் தலைவியாய் என்றும் திகழ்வீரே!

**"கலை பேரரசி"** நின் தொண்ணூறாம் பிராயத்தில்

கழலடி வணங்கி யாம் சாற்றும் பாமாலையை,

பூமாலையாய் ஏற்று ஆசிமழை பொழிவீரே!

அஃதே எங்கள் வேண்டுதலும் ஆகும்.

திருவடிகளில் நாங்கள் அனைவரும் பணிகின்றோம்.

**19.08.2020** **"கலைமாமணி" கௌரி ராஜகோபால் சகோதர சகோதரியர்.**